அலகு

# 11

# கருத்துசார் நிலவரைபடம்



## அலகு கண்ணோட்டம்


*11.1 அறிமுகம்*

*11.2 கருதுத்சார் நிலவரைபடங்கள்*

*11.2.1 புள்ளியிடுதல் முறை*

*11.2.2 நிழற்பட்டை முறை*


## கற்றல் நோக்கங்கள்

- கருத்துசார் நிலவரைபடங்கள் பற்றிய அறிவை மேம்படுத்துதல்.
- கருத்துசார் நிலவரைபடங்களைப் புரிந்துகொள்ளுதல்
- புள்ளியியல் மற்றும் நிழற்பட்டை முறைகளின் முக்கியத்துவத்தை உணர்தல்
- புள்ளியியல் மற்றும் நிழற்பட்டை முறை நிலவரைபடங்களை விவரணம் செய்தல்
- புள்ளியியல் மற்றும் நிழற்பட்டை முறைகளை பயிற்சி செய்து கற்றல்

3LKG4

## 11.1 அறிமுகம்

கருத்துசார் நிலவரைபடம் என்பது ஒரு குறிப்பிட்டக் கருத்தை அல்லது ஒரு இடத்தின் மக்கள் தொகைப் பரவல் போன்ற ஒரு தலைப்பைக் காட்டுவதாகும். இது பொது விவர நிலவரைபடத்திலிருந்து மாறுபட்டதாகும். ஏனெனில் இது ஆறுகள், நகரங்கள், அரசியல் எல்லைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற பொதுவான தகவல்களைக் காட்டுவதில்லை.

## 11.2 கருத்துசார் நிலவரைபடங்கள்

ஒரு குறிப்பிட்ட புவியியல் தரம் அல்லது எண்ணிக்கை போன்றவற்றின் இடம்சார் வடிவங்களை காட்ட பல்வேறு நிலவரைபடக் குறியீடுகளை கருத்துசார் நிலவரைபடங்கள் பயன்படுத்துகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

*1854-ல் லண்டனை சேர்ந்த ஜான் ஸ்னோ என்ற மருத்துவர் லண்டன் நகர் முழுவதும் காலரா பரவியிருந்த இடங்களுக்கான முதல் கருத்துசார் நிலவரைபடத்தை வரைந்து ஆய்வு செய்தார்.*

ஒன்று அல்லது பல சிறிய எண்ணிகையிலான புவியியல் தகவல்களின் பரவல்களை காட்டுவதை கருத்துசார் நிலவரைபடங்கள் வலியுறுத்துகின்றன. இவ்வகைப் பரவல்கள் காலநிலை போன்ற இயற்கை நிகழ்வுகளாகவோ அல்லது மக்களடர்த்தி மற்றும் உடல்நலம் போன்ற மக்கள்தொகைக் கூறுகளாகவோ இருக்கலாம்.

மக்கள்தொகை அடர்த்தி, பரவல், ஒப்பளவை, சாய்வு விகிதம் மற்றும் பரப்புசார் தொடர்புகள் மற்றும் இடப்பெயர்வு போன்ற புவியியல் கருத்துகளைக் காட்ட கருத்துசார் நிலவரைபடங்கள் பயன்படுகின்றன.